செய்து கொண்டனர் அல்லது ஆவணங்களை ஒப்படைத்து விட்டுச் சமாதானம் செய்து கொண்டனர். 2334/71-ம் எண்ணுள்ள குற்ற வியல் வழக்கொன்றில் குற்றஞ்சாட்டப்பட்ட ஒருவர் சென்னை உயர் நீதி மன்ற நொடித்தவர் சொத்தாட்சியரிடம் (Official Assignee) நொடிப்பு மனு (Insolvency Petition) ஒன்றைத் தாக்கல் செய்து ஆவணங்கள், நிலங்கள் ஆகிய அனைத்தையும் ஒப்படைத்துள்ளார். அவர் கடன் கொடுத்தவர்களின் பட்டியல் ஒன்றை உயர்நீதி மன்ற நொடித்தவர் சொத்தாட்சியரிடம் கொடுத்துள்ளார். அவர் புகார் கொடுத்தவரின் பெயரையும் அந்தப் பட்டியலில் சேர்த்துள்ளார். எனவே, இவ்வழக்கு குறித்து மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பது நிறுத்திவைக்கப்பட்டது.

Representation from Tamil Nadu Typists and Steno—Typists Association.

*112 *Q.*—THIRU C. V. RAJAGOPAL (on behalf of THIRU M. SANKARALINGAM): Will the Hon. the Chief Minister be pleased to state :

(*a*) whether the Government of Tamil Nadu Typists-Stenographer's Association has sent any representation to the Government ; and

(*b*) if so, the decision taken thereon ?

தமிழ் நாடு அரசு தட்டச்சர், சுருக்கெழுத்துத் தட்டச்சர் சங்கத்திடமிருந்து கோரிக்கை மனு.

திரு. சி. வி. ராஜகோபால் (திரு. எம். சங்கரலிங்கம் சார்பில்) : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ் நாடு அரசு தட்டச்சர், சுருக்கெழுத்துத் தட்டச்சர் சங்கம் அரசுக்கு கோரிக்கை மனு ஏதேனும் அனுப்பியுள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் மீது எடுத்த முடிவு யாது ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) ஆம்.

(இ) தமிழ் நாடு அரசு தட்டச்சர் சுருக்கெழுத்துத் தட்டச்சர் சங்கம் அரசினால் அங்கீகரிக்கப்படாததால் நடைமுறையிலுள்ள விதியின் படி இக்கோரிக்கை மனுவை அரசு பரிசீலிக்கவில்லை.

Government High School at Nemili.

*113 *Q.*—THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR : Will the Hon. the Minister for Education be pleased to state :

(*a*) whether the Government have received any complaint to the effect that admission is refused to students in the Government High School at Nemili, North Arcot District, if they merely mention that they are Tamilians without mentioning the caste name ; and

(*b*) if so, the action taken thereon ?